
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1277

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

72

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# கலைஞரின் கோபாவேசமே, ‘புதிய பராசக்தி!’

1996-ஆம் ஆண்டில் வெளிவந்த ‘புதிய பராசக்தி’ திரைப்படம், கிராமங்களில் நவீன வடிவில் நீடித்துவந்த பண்ணை ஆதிக்கத்தை எதிர்த்தது. வழக்கம் போலவே, இத்திரைப் படத்தின் தொடக்கக் காட்சியிலும், கலைஞர் தோன்றி திரைப்படத்தின் நோக்கம் பற்றி சுருக்கமாக விளக்குவார்.

“வணக்கம். என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே வணக்கம். இப்போது எனக்கு வயது 72. என் பொது வாழ்க்கையின் வயது 57. அதில் என் கலையுலக வாழ்க்கை 50 வயதுகளை எட்டக்கூடியதாகும்.

கலையுலகில் என்னை வரவேற்று, மக்களின் மகத்தான வரவேற்பையும் பெற்றவர்கள் 1947-இல் ‘ராஜகுமாரி’, 1950-இல் ‘மந்திரிகுமாரி’, 1951-இல் ‘மருதநாட்டு இளவரசி’, இந்த மூன்று படங்களிலும் நான் திரைக்கதை வசனம் எழுதி, கதாநாயகனாக நடித்தவர் என் அருமை நண்பர் எம்.ஜி.ஆர்.

அடுத்து, என் நான்காவது படமாக வெளிவந்ததுதான், சிவாஜி கதாநாயகனாக நடித்த ‘பராசக்தி’ (1952). என் திரைக்கதை வசனத்தில், 43 ஆண்டுகளுக்கு முன்பு வெளி வந்த ‘பராசக்தி’க்கும் பிறகு, சுமார் 60 படங் களுக்கு திரைக்கதை வசனம் எழுதியுள்ள நான், இதோ ‘புதிய பராசக்தி’க்குத் திரைக்கதை வசனம் எழுதி உங்கள் முன் வழங்குகிறேன்.

ஜனநாயகத்தில் தலைகளை மட்டும் எண்ணிப் பயனில்லை. அந்தத் தலைகளுக்குள் என்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால்தான் உண்மையான ஜனநாயகம் உருவாகிப் பயன்பட முடியுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லுவார்.


எடுத்துக்காட்டாக, ஓர் எருமை மாட்டை நூறு பேர் சேர்ந்துகொண்டு, ‘பசுமாடு’ என்கிறபோது, ‘இல்லை, இது எருமைமாடுதான்’ என்று 20 பேர் சொன்னால், அது எடுபடாமல் போகிறது. அத்தகைய அறிவுக்குப் புறம்பான ஜனநாயகம் கூடாது. ஆனால், இந்தப் படத்தில் வரும் ஜனநாயகம் வேறு வகையானது.

எருமையை, பசு என்று ஒரு ஆதிக்க சக்தி சொல்கிறது. அதற்கு ஊரில் உள்ள பெரும்பான்மையான மக்கள், ‘ஆமாம், ஆமாம்’ என்று தலையாட்டுகிறார்கள். காரணம் அச்சம், அடிமை மனப்பான்மை. அந்த ஆதிக்க சக்தியை எதிர்த்து வீழ்த்த நினைப்போர், வீழ்ந்து போகிறார்கள். இறுதியில், ஒரு சக்தி பொங்கி எழுகிறது. ஆதிக்க சக்தியை எதிர்த்துக் குமுறும் சக்திதான், ‘புதிய பராசக்தி’.... ‘புதிய பராசக்தி...”

கலைஞரின் இம்முன்னோட்டம், ஒரு விசயத்தை நமக்குத் தெளிவாக்கிவிடுகிறது. அதாவது, ‘புதிய பராசக்தி’ திரைப்படம், கிராமப்புற ஆதிக்க சக்தியை எதிர்த்துப் போராடும் ஒரு ஜனநாயக சக்தியைப் பற்றியது. இவ்வாறு கிராமப்புற ஜமீன்தார்களையும் பண்ணையார்களை நிலப்பிரபுக்களை எதிர்த்தும், அவர்களது அடாவடித்தனங்களை விமர்சித்தும், கலைஞர் ஏற்கெனவே பல திரைப்படங்களுக்குத் திரைக்கதை வசனத்தை எழுதி உள்ளதை நாமறிவோம்.

### காலத்தை உணர்ந்த எழுத்து

அந்த வரிசையில், 1996-ஆம் ஆண்டில் அன்றைய காலச்சூழலுக்கு ஏற்ற வகையில், ஒரு கிராமத்தைச் சித்தரித்து, அங்கு நடப்பில் உள்ள ஆதிக்கவாதியின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள், அடாவடித் தனங்கள், சுரண்டல், பாலியல் வன்கொடுமை, ஒடுக்குமுறை, கொலை, பொதுச் சொத்தைச் சூறையாடுவது போன்ற வற்றைப் பற்றியெல்லாம் கலைஞர் மிகத்துல்லியமாகப் படைத்துக் காட்டியுள்ளார்.



எடுத்துக்காட்டாக, பிரசிடென்ட் ராஜதுரை (நெப்போலியன்) மக்களுக்கு அரசு வழங்கிய நிலங்களை எல்லாம் அபகரித்துக்கொண்டு, அதற்கான வரியையும் அவனே செலுத்திவருகிறான்.

ராஜதுரையின் சதியால் சிறைக்குச் சென்று திரும்பும் சின்னச்சாமி, விழிப்புணர்வு பெற்று ராஜதுரையை எதிர்த்துப் போராடத் துணிகிறான். அப்போது, பட்டாளத்துக்காரராக வரும் வாகை சந்திரசேகரோடு நடக்கும் உரையாடலில்...

**சின்னச்சாமி:** அந்த ராஜதுரை இதுநாள் வரை எங்க உழைப்பை மட்டும்தான் உறிஞ்சான்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். எங்க உரிமையும் பறிபோயிருக்குன்னு இப்பத்தான் தெரியுது. ஊர்ஜனங்கள் பேரில் பட்டா இருக்கு. உழைக்கிறது அவுங்க, ஆனால் உண்டு கொழுக்கிறது, உருட்டி மிரட்டுறது பண்ணையாரா?

எங்க சொந்த பூமின்னு எங்களுக்கே தெரியாம இத்தனை நாளா அதுல வேலை செய்து கூலிய வாங்கிட்டு இருந்தோம். எங்க பட்டா நிலத்த வச்சு ஏமாத்தி, அவன் என்னமோ புத்தர், காந்தி மாதிரி வேசம் போட்டு, ஏமாத்திக்கிட்டுத் திரியுறான்.





தனது வேலையாளான சின்னச்சாமியை (செல்வா) பிரசிடென்டாக ஆக்கி, அவனைப் பினாமியாக வைத்துக்கொண்டு, இதனைச் செயல்படுத்துகிறான். பொதுச் செலவுக்காக அரசு தரும் ரூபாய் 15 இலட்சம் நிதியை, மக்கள் நலனுக்குச் செலவழிக்காமல், தனது சொந்தச் செலவுக்குப் பயன்படுத்துகிறான். சின்னச்சாமி, மகப்பேறு மருத்துவமனையும் பள்ளிக்கூடமும் கட்ட விரும்புகிறான். ஆனால் ராஜதுரை, சின்னச்சாமியை ஏமாற்றி, காசோலையில் கையெழுத்து வாங்கிக் கொண்டு அவனை அனுப்பிவிடுகிறான்.

அப்போது நடக்கும் உரையாடலில், ‘அய்யா, நம்ம ஊருல பிரசவ ஆஸ்பத்திரி இல்லாம ஜனங்க ரொம்ப கஷ்டப்படுறாங்க’ என்றும் குழந்தைகள் படிக்க பள்ளிக்கூடம் வேண்டும் என்றும் கூறுவான். கையெழுத்து வாங்கிக்கொண்ட பின்னர், பண்ணையார் ராஜதுரை தனது கையாள் செவளையிடம் “ஆத்தோரத்துல இருக்குற அருணாசலத்தோட மாந்தோப்பை விலை பேசினோம். அதுக்கு இத அட்வான்ஸா கொடு” என்று காசோலையைக் கொடுக்கிறான். சின்னச்சாமி அதிர்ச்சியில் உறைந்து நிற்பான். அப்போது...

**செவளை :** அட என்னையா நீ, அய்யாதான் டூரிங் டாக்கீஸ் நடத்துறாருல அப்புறம் எதுக்குப் பள்ளிக்கூடம்? பசங்களை யெல்லாம் டூரிங் டாக்கீஸுக்கு அனுப்பு. ஏற்கெனவே, உள்ள பள்ளிக்கூடத்துலயே மாடு மேயுது. சாணி அள்ளவே ஆளு இல்ல’ என நக்கல் செய்வான்.

> **பழைய ‘பராசக்தி’யில் பேசியவற்றையும் நலத்திட்டங்களாகச் செயல்படுத்தினார். அதைத் தடுப்பவர்களுக்கு எதிராக, ‘புதிய பராசக்தி’யில் அறம் பாடினார்.**

**பட்டாளத்துக்காரர் (வாகை சந்திரசேகர்):** போடா பைத்தியக்காரா. நம்ம ஊரு ஜனங்க இருக்காங்களே... அவங்க உண்மையான காந்தியத்தான் கொல்லுவாங்க, உண்மையான புத்தர் சொன்னத ஏத்துக்காம, அவரையே வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வாங்க. ராஜதுரை மாதிரி போலிகளைத்தான் தலையில தூக்கி வச்சுக்கிட்டு ஆடுவாங்க. உழைக்கிறவன் யாரு, உல்லாசி யாருன்னு உணுற புத்தியிருந்தா, இந்த ஊரு என்னைக்கோ உருப்பட்டிருக்கும்.

**சின்னச்சாமி:** சட்டப்படி இந்தப் பட்டாக்கள மக்களுக்குச் சொந்தமாக்க என்னதான் வழி?

**பட்டாளத்துக்காரர்:** சட்டங்கிறது முட்டைக் குள்ள இருக்குற குஞ்சு மாதிரி. அத அடைகாத்து சூடு ஏத்துனாதான் வெளியில வரும். அது மாதிரி, சட்டத்த நிலைநாட்ட ஜனங்களத் திரட்டு, சூடு சொரணை ஏத்து.

**சின்னச்சாமி:** இப்பவே புறப்படுறேன். இதுநாள் வரைக்கும் சினிமா வண்டி ஓட்டி, ஓட்டி ஜனங்கள தியேட்டர் வாசல்ல நிக்க வச்சேன். இன்று, அதே ஜனங்களை அந்த ராஜதுரை வீட்டு வாசல்ல நிக்க வைக்கிறேன்” என்று புறப்படுகிறான்.

அரசு மக்களுக்குச் செய்யும் நலத்திட்டங்கள், மக்களுக்குச் சென்று சேராமல் தடுக்கும் கிராமப்புற ஆதிக்கவாதிகளை, பண்ணையார்களுக்கு எதிராக மூன்று முறை முதலமைச்சரான பின்னும், தனது கோபாவேசத்தை இந்தப் படத்தின்மூலம் காட்டினார் கலைஞர். இந்தப் படத்தின் மூலம் அவர் நினைத்த மாற்றங்களை, அதே ஆண்டு ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர் திட்டங்களாக்கினார். அதுதான் கலைஞர். பழைய ‘பராசக்தி’யில் பேசியவற்றையும் நலத்திட்டங்களாகச் செயல்படுத்தினார். அதைத் தடுப்பவர்களுக்கு எதிராக, ‘புதிய பராசக்தி’யில் அறம் பாடினார். தனது எழுத்துகளாலும் எண்ணங்களாலும் தமிழ்நாட்டின் நலனையே வெளிப்படுத்தியவர் கலைஞர் என்பதற்கு, ‘புதிய பராசக்தி’யும் சான்று.

**...காட்சி விரியும்**

## த.வெ.க. ஆட்சியின் அலங்கோலங்கள்!

த.வெ.க. ஆட்சி அமைந்த நாளில் இருந்து, தினந்தோறும் ஏதாவது ஒரு வகையில், தமிழ்நாட்டின் உரிமைகள் பறிபோகத் தொடங்கியுள்ளதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். அந்த உணர்வினை, ‘எழுதிச் சமாளிக்க முடியாத த.வெ.க. ஆட்சி’ எனப் பகடி செய்துள்ளார், அரசியல் விமர்சகரும் எழுத்தாளருமான ராஜன் குறை கிருஷ்ணன்.

“ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னால் சரி, நாம் தத்துவம், கலை, அழகியல் என்றிருக்காமல், நாட்டின் அரசியல் நிலை கருதி, வாரம் ஒரு நாள் அரசியல் நிகழ்வுகளைப் பற்றிய பத்தி எழுதலாம் என்றுதான், மின்னம்பலத்தில் எழுதத் துவங்கினேன். வாராவாரம் ஞாயிற்றுக்கிழமை இரவு எழுதுவேன். திங்கள் காலை மின்னம்பலத்தில் வரும். இப்போது, த.வெ.க. ஆட்சி துவங்கிய பிறகு, வாரம் ஒருமுறை என்றால், எதைப்பற்றி எழுதுவது? எனக் குழம்பும் அளவு தினசரி அலங்கோலங்கள் நடக்கின்றன. சாம்பிளுக்கு சிலவற்றை இந்த வாரமே பாருங்களேன். இதில் எதைப் பற்றி எழுதுவது என்று எனக்கே புரியவில்லை.

1. கரூரில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு அநியாயமாக, அரசு வேலை கொடுத்ததை ரத்துசெய்த உயர் நீதிமன்றம்.
2. நெல்லை மனோன்மணீயம் பல்கலையில் வந்தே மாதரத்திற்கு முதலிடம். முதல்வர் மௌனம்.
3. தி.க. நீட் தேர்வு எதிர்ப்புப் பிரச்சாரத்திற்குத் தடை. பெரியார் திடலில் போலீஸ் குவிப்பு.
4. காவிரி நதிநீர்ப் பேச்சுவார்த்தை நாடகத்திற்கு, விஜய் பெங்களூரு பயணம்.
5. வாஸ்து மூடநம்பிக்கைக்காக, முதல்வர் அலுவலக மாறுதல் என்ற வெட்டி ஆடம்பரச் செலவு.

எழுதி மாளாது போல. இதுல த.வெ.க. எஜமானர்கள், ஒரிஜினல் பாசிஸ்ட்டுகளின் செயல்பாடுகள் வேறு. முடியல” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### வாழ்நாளில், மறக்க முடியாது!



‘புல்லட்’ கி.இரமேஷ்

2018-ஆம் ஆண்டு ஏப்ரல் 22-ஆம் தேதி, இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையேற்று, எனது மூத்த மகள் ஆர்.இராஜலட்சுமி-தி.மனோஜ்பிரபாகர் இணையரின் திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்து வாழ்த்தினார். நம் நெஞ்சிலிருக்கும் தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் சேர்த்து தலைவர் வாழ்த்தியது, எனக்கும் என் குடும்பத்தாருக்கும் மிகுந்த மனமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. எங்களுக்காகத் தலைவர் வருகை தந்தது, எங்களின் வாழ்நாளில் மறக்கமுடியாதது.

**- ‘புல்லட்’ கி.இரமேஷ்,**
**பகுதிக் கழகத் துணைச் செயலாளர்,**
**திரு.வி.க.வடக்குப் பகுதி, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### ஐம்பதாயிரம் மக்கள் பேரணி!

1961-ஆம் ஆண்டு, ஜூலை 13-ஆம் தேதி மதுரையில், கழகத்தின் மூன்றாவது பொது மாநாட்டு ஊர்வலம், காலை 10 மணி அளவில் தொடங்கியது. வண்டியூர் தெப்பக்குளத்திலிருந்து ஊர்வலம், திருப்பரங்குன்றம் நோக்கிப் புறப்பட்டது. ஊர்வலத்திற்கு முன்பு ஐம்பதாயிரம் மக்கள் தங்கள் கரங்களில் இரு வண்ணக் கொடிகளை ஏந்தியிருந்தனர். அவர்களுக்கு முன்பாக ஆயிரக்கணக்கான சைக்கிள்கள், நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள்கள், கார்கள், பஸ்கள், வேன்கள் முன்தொடர, மக்கள் வீரநடையிட்டுச் சென்றனர். ஊர்வலம் மதுரை மாநகரின் முக்கிய வீதிகளில் பவனி வந்து, மாநாட்டுப் பந்தலை பகல் 3 மணிக்கு அடைந்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900